# போக்குவரத்து துறை

அனுப்புநர்

கூடுதல் தலைமைச் செயலாளர்/ போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

பெறுநர்(மின்னஞ்சல் மூலமாக)

அனைத்து சரக அலுவலர்கள்,
அனைத்து செயலாக்க அலுவலர்கள்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும்
மோட்டார் வாகன ஆய்வாளர்கள்.

ந.க.எண்.5265/HB2/2021 நாள். 04 .03.2021

அய்யா,

| | |
|---|---|
| பொருள்: | மோட்டார் வாகனம் - போக்குவரத்து அல்லாத வாகனங்களை மோட்டார் வாகன சட்டத்திற்கு புறம்பாக போக்குவரத்து வாகனமாக பயன்படுத்துதல் - புகார்கள் வரப்பெற்றது - சில அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக. |

--------------

போக்குவரத்து அல்லாத வாகனங்களை போக்குவரத்து வாகனமாக மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பாக இயக்குவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர்/போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களுக்கு அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இவ்வாறு இயக்கப்படும் வாகனங்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுமாறும் அனைத்து செயலாக்க அலுவலர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகியோருக்கு இது தொடர்பாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கும், போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

எனவே, இப்புகார் தொடர்பாக தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் போக்குவரத்து அல்லாத வாகனங்களை போக்குவரத்து வாகனமாக பொதுச்சாலையில் இயங்குவதை சிறப்பு கவனம் செலுத்தி கண்டறிந்து மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின்படி தக்க நடவடிக்கை உடனுக்குடன் எடுக்குமாறு அனைத்து செயலாக்க அலுவலர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- தென்காசி சு ஜவஹர்
கூடுதல் தலைமை செயலாளர்/
போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

//உத்தரவின்படி//

உதவி செயலாளர்-III
போக்குவரத்து ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

நகல்

1. திரு. C.கமலஹாசன்,
   தென்னிந்திய வாகன ஓட்டுநர்கள் முன்னேற்ற கழகம், 24, இரட்டைமலை ஸ்ரீனிவாசன் தெரு, சமத்துவ பெரியார் நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை-600 063.
2. உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம், எண்.3, கட்டத்தொட்டி சந்து, புதுமார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை-45.
3. ஜெய் தமிழ்நாடு அனைத்து வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் சங்கம், எண். 14/2, முதல் மாடி, கிருஷ்ணன் முதல் தெரு, நாவலர் காலனி, சூலைப்பள்ளம், எம்.ஜி.ஆர் நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78.

Scanned By Scanner Go